**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**M.C.O.P. No. 27 / 2024**

**2026ம் வருடம் பிப்ரவரி மாதம் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**ம.சா.1 – சத்தியமூர்த்தி**

**முதல் விசாரணை தொடர்ச்சி :–**

நான் இந்த மனுவின் 1வது மனுதாரர் ஆவேன். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. ராதிகா பள்ளி பதிவுத்தாள் அசல் ம.சா.ஆ.17

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்திரவாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். எனது மனைவிக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது. ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் மோட்டார் வாகன ஆய்வின்போது ஓட்டுனர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது மனைவிக்கு சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் பெற்றேன். வட்டார போக்குவரத்து அலுவலரை விசாரித்து எனது மனைவிக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்பதை நிரூபிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது மனைவியின் ஓட்டுனர் உரிமத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். ம.சா.ஆ.2 பிரேத பரிசோதனை அறிக்கையில் எனது மனைவி

தலைக்காயத்தால் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது மனைவி தலைக்கவசம் அணியாமலும் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் இல்லாமலும் தவறான பாதையில் சென்று 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது மனைவியின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ம.சா.ஆ.8 ஆவணத்தின் படி எனது மனைவிக்கு என்ன வருமானம் வந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மனைவி எனது பராமரிப்பில் தான் இருந்துவந்தார் என்றும் அதிக இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக ம.சா.ஆ.8 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணத்தின்படி எனது மனைவிக்கு விபத்தின் போது வயது 44 என்றும் அதிக இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக ம.சா.ஆ.17 இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அடிப்படை ஆதாரமின்றி இழப்பீட்டை மிகைப்படுத்தி கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை